**செய்தி வெளியீடு எண்: 282** **நாள்: 09.05.2012**

**<u>மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க</u>**

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

**திரு.செல்லூர் கே. ராஜூ** அவர்களின் தலைமையில்

அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம்

நடப்பாண்டிற்கானஅனைத்து அறிவிப்புகளையும் குறியீடுகளையும் திட்டமிட்டு நிறைவேற்றிடுமாறு அலுவலர்களுக்கு அறிவுரை

*****

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் இன்று (9.5.2012) மாலை 3.00 மணியளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்ட அரங்கில் அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம், நடைபெற்றது.

அப்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2012–13 ஆம் நிதியாண்டில் ரூ.4,000 கோடிக்கு பயிர்க்கடன் வழங்க குறியீடு நிர்ணயித்து அதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பிரிவினர்களுக்கு ரூ.800 கோடி வழங்க வேண்டுமென்றும், இப்பயிர்க் கடனை அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்குமாறும், பயிர்க்கடன் வழங்காத தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் பயிர்க்கடன் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

மேலும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் முதலீட்டுக் கடனாக ரூ.300 கோடியும், தானிய ஈட்டுக் கடனாக ரூ.100 கோடியும் மாற்றுத் திறனாளிகளுக்கு பொருளாதார முன்னேற்ற கடன்கள் ரூ.10 கோடியும் வழங்க நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டை உரிய காலத்தில் நிறைவேற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அனைத்து கூட்டுறவு வங்கிகளும், சிறுவணிகக் கடன், சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் மற்றும் நகையீட்டுக் கடன் ஆகியவற்றை எவ்விதப் பிரச்சினைகளுக்கு இடமின்றி உடனுக்குடன் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

1118 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் 48 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் கட்டப்படும் கிடங்குகளின் கட்டுமானப் பணிகளை வேகப்படுத்தி விரைந்து முடிக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதோடு, கூட்டுறவு வங்கிகள் தமது நிதியாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள வைப்புத் தொகை சேகரிப்பில் கவனம் செலுத்தி, வங்கியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பாடுபட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் உன்னத திட்டமான விலையில்லா அரிசியை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதில் கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் அதிகாரிகளும் பணியாளர்களும் சிறப்புடன் செயல்பட்டு, அரசுக்கு நற்பெயரைத் தொடர்ந்து ஈட்டித் தர வேண்டும். அதேப்போன்று, சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய் மற்றும் இதரப் பொருள்களையும் எவ்விதப் புகாருக்கு இடமின்றி வழங்கிடுமாறும், அதனைத் தொடர்ந்து கண்காணித்திடுமாறும் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

மேலும், கூட்டுறவுத்துறை மானியக்கோரிக்கையின்போது அறிவித்த 21 அறிவிப்புகளையும், நடப்பாண்டிற்கான அனைத்து குறியீடுகளையும் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே செயல்படுத்திட ஏதுவாக, இப்போதிலிருந்தே திட்டமிட்டு நிறைவேற்றிட தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு. ப. அண்ணாமலை, இ.ஆ.ப., அரசு துணை செயலாளர் திருமதி C.T.மணிமேகலை,இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.இரா.ராஜேந்திரன், திரு.க.பு.பெ.பன்னீர்செல்வன், திரு.அ.சங்கர லிங்கம், திரு.எம்.பி.சிவன் அருள், திரு. இராம. ஜெயம்பாண்டியன் மற்றும் அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**<u>தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், சென்னை–10</u>**

---

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**